<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 205/2015 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | குமரேசன் | நாள் | 18.10.2022 |
| தகப்பனார் பெயர் | சிகாமணி | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை</u> :–

1) நான் என் முதல் விசாரணையில் நீதிமன்றத்தில் குறியீடு செய்த வாதி தரப்பு சாட்சியின் மூன்றாம் நபர் சான்றாவணங்கள் Ex.X2 ல் இருந்து Ex.X4 வரையிலான ஆவணங்கள் எந்த அலுவலகத்தில் இருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால், சூரப்பள்ளி ஊராட்சி மன்ற அலுவலகத்திலிருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேன்.

2) Ex.X4 வீட்டுவரி ரசீதானது எந்த சர்வே நெம்பருக்குரியது என்றால், தற்போது என்னிடமுள்ள வீட்டுவரி கேட்பு பதிவேட்டில் மேற்படி ரசீதுக்கான சர்வே எண்கள் பற்றிய பதிவுகள் காணப்படவில்லை. மேற்படி விவரங்கள் கிராம நிர்வாக அலுவலருக்குதான் தெரியும். அதனால், சர்வே எண் குறித்து எனக்கு தெரியாது.

3) எனக்கு நீதிமன்ற அழைப்பாணையில் நான் தற்போது பணியிலுள்ள அலுவலகத்தில் இருந்துதான் ஆவணங்களை எடுத்து வரக்கோரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் தற்போது நங்கவள்ளி யூனியன் அலுவலகத்தில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி யூனியன் அலுவலகத்தின் நிர்வாக வரம்பிற்கு உட்பட்டுதான் சூரப்பள்ளி பஞ்சாயத்து அலுவலகம் வருகிறது. எனவே மேற்படி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை சூரப்பள்ளி பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்து எடுத்து வந்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

4) ஏற்கனவே நீதிமன்றத்தில் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட சூரப்பள்ளி பஞ்சாயத்து தலைவர் மாரிமுத்து என்பவர் மூலமாக இந்நீதிமன்றத்தில் Ex.X1 ஆக குறியீடு செய்யப்பட்ட அதே ஆவணத்தைதான் நான் மீண்டும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி அது Ex.X3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், மேற்படி Ex.X1 ஆவணம் குறிப்பிட்ட வருடத்திற்கு மட்டும் உரிய பதிவுகள் அடங்கியது.

தற்போது நான் தாக்கல் செய்துள்ள Ex.X3 ஆவணமானது நாளது தேதி வரையிலான பதிவுகள் அடங்கியது.

5) சூரப்பள்ளி பஞ்சாயத்து தலைவரின் பெயர் மாரியப்பன் என்றால், சரிதான்.

ஓம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.